ഷേക്സ്പീയർ (വില്യം)

[illegible]

O111,2JSH,R
M87
116193

# AS YOU LIKE IT

IN TAMIL

BY

PANDIT S. M. NATESA SASTRI

*Member of the Council of the Folklore Society, London.*

# ராஸலிண்டு சரித்திரம்

[illegible]

பண்டித நடேச சாஸ்திரியாரால்

இயற்றப்பட்டது.

**Madras:**

PRINTED AT THE CENTRAL PRESS.

1887.

*Copy-right.*

**Price 1 Anna.** விலை 1 அணா.

# AS YOU LIKE IT

*TRANSLATED*

BY

PANDIT NATESA SASTRI

*Member of the Council of the London Folklore Society*

# ராஸலின்டு சரித்திரம்.

இது

லண்டன் கதாசபையார் மெம்பர்

பண்டித நடேச சாஸ்திரி யாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

**Madras:**

Printed at the Central Press,

1887.

தங்கம்பாக்கம் பழைய காலேஜ் புத்தகசாலையில்

பெற்றுக்கொள்ளலாம்.

*Copy-right.*

Price one Anna. விலை அணா 1.

116193

M67

# விக்ஞாபனம்

"ஆஸ் யூ லைக்கிட்" என்னும் நாடகமானது ஷேக்ஸ்பியர் மகா கவியால் கி. பி. 1600-வது வருஷம் எழுதப்பட்டது. இதில் முக்கியமான கதாநாயகி ராஸலின்டு என்பவள். "ஆஸ் யூ லைக்கிட்" என்னும் பதங்களின் அர்த்தம் "உவாட்யூவில்" என்னும் பதங்களைப்போல "உனது இஷ்டம்போல" என்பதாம். இந்த நாடகத்தை "உனது இஷ்டம்போல" என்று குறிப்பதைவிட "ராஸலின்டு சரித்திரம்" என்று குறிப்பது நலமாயிருக்கும் என்றெண்ணி அந்தமாதிரி செய்திருக்கிறேன்.

## இந்நாடகத்தில் வரும் ஸ்திரீ புருஷர்கள்.

அரசன்.

பிரடெரிக் (Frederic) அரசன் தம்பி இவன் கொடுங்கோன் மன்னனாய் தன் தமையனைத் துரத்திவிட்டான்,

ஆலிவர் } ஸர் ரோலன்டு டி பாய்ஸ் என்னும்
ஆர்லென்டோ } பிரபுவின் குமாரர்கள்.

ஆடம். டி பாய்ஸ் வீட்டு வேலைக்காரன்.

ராஸலின்டு (Rosalind) அரசன் மகள்.

ஸீலியா (Celia) பிரடெரிக்கின் மகள்.

கானிமீட் (Ganeymede) ராஸலின்டு தான் இடைப்பையன் வேஷம் போட்டுக்கொண்டபொழுது வைத்துக்கொண்ட பெயர்.

அலீனா (Aliena) ஸீலியா தான் இடைப்பெண் வேஷம் போட்டுக்கொண்டபொழுது வைத்துக் கொண்டபெயர்.

தேசம்.—பிரான்ஸ் (France)

ஆரண்யம்.—ஆர்டன் (Arden).

உ

# ராஸலின்டு சரித்திரம்.

பிரான்ஸ் (France) தேசம் அநேக நாடுகளாய்ப் பிரிக்கப் பட்டிருந்தகாலத்தில் ஒரு நாட்டில் பிரடெரிக் என்னும் ஒரு கொடுங்கோன் மன்னனரசாட்சி செய்துவந்தான். இவன் நியாயமாய்ப் பட்டத்துக்குரிய தனது தமையனை அந்நாட்டிலிருந்து துரத்திவிட்டு அவன் பதவியைத்தானே அபகரித்தவன்.

இம்மாதிரி தன் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட அரசன் ஆர்டன் (Arden) என்னும் காட்டில் சிலவிசுவாசமுள்ள சிநேகிதர்களோடு வசித்துக்கொண்டுவந்தான். இவர்கள் இந்தக் கொடுங்கோன் மன்னனுக்காகப் பயந்து தங்கள் நிலபுலங்களையெல்லாம் விட்டுவிட்டுக் காட்டிற்கு ஓடிவந்துவிட்டார்கள். தங்களுக்கு வந்தகஷ்டநிலைமையைக் கொஞ்சமேனும் உணராதவர்களாய்க்காட்டிலிருக்குங் கந்தமூலபதார்த்தங்களைப் புசித்துக்கொண்டு கபடமற்ற மான் முதலியவைகளுடன் பழகிக்கொண்டு தங்கள் வாழ்நாட்களைக் கழித்துவந்தார்கள்.

கொடுங்கோன்மன்னர் வாழுநாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றே.

அன்றியும் பாபத்திற்குப் பயந்தவர்களாய்த் தங்கள் ஆகாரத்திற்குக்கூட இந்த வாயில்லாச்சீவன்களைக் கொல்லுகிறதில்லை. குளிர்காலத்தில் குளிர்ந்தகாற்று அடிக்கும்பொழுதும் அதைப்பொறுமையுடன் சகித்துக்கொண்டு மரங்களுடனும் அரித்தோடும் நதிகளுடனும் கற்களுடனும் பழகிக்கொண்டு தங்கள்வாழ்நாட்களைச் சந்தோஷமாய்க் கழித்துவந்தார்கள்.

காட்டுக்குத் துரத்திவிடப்பட்ட இவ்வரசனுக்கு ராஸலின்டு (Rosalind) என்றொரு பெண்மணி இருந்தாள். இவளைப் பிரடெரிக் என்னும் கொடுங்கோன் மன்னன் அவன்

தகப்பனுடன் காட்டுக்குப்போகாமல் தன் பெண்ணுகிய ஸீலியா (Celia) என்பவளுக்குத் தோழியாக இருக்கும்படித் தன்னரண்மனையிலேயே நிறுத்திக்கொண்டான். இவ்விருபெண்களுக்குமிருந்த அன்பை ஒருவராலும் விவரிக்கமுடியாது. ராஸலின்டு என்பவளுடைய தகப்பனுக்குத் தன்தகப்பனுகிய பிரடெரிக் செய்த அக்கிரமத்தை நினைத்துநினைத்து அவளை மிகவும் அன்பாயும் விசுவாசமாயும் நடத்திவந்தாள். ராஸலின்டு தன் தகப்பனுக்கு நேர்ந்தகஷ்டத்தை நினைத்துத் துக்கப்படும்பொழுது அவளை ஆதரித்துத் தேறுதல்செய்வது ஸீலியாவே. ஒவ்வொரு விஷயத்திலும் ஸீலியா என்பவள் ராஸலின்டினிடம் அதிக அன்பைக்காட்டிவந்தாள். இப்படியே வெகுகாலம் சென்றது.

ஒருநாள் பிரடெரிக் என்பவன் தனது அரண்மனையில் மல்லயுத்தம் செய்வோர்கள் வந்து சண்டைசெய்ய ஏற்பாடு பண்ணி தன் பெண்களுக்கும் அந்த வேடிக்கையைவந்து பார்க்கச்சொல்லி யனுப்பினான். அக்காலத்தில் மல்யுத்தம் செய்வோர்கள் செய்யும்போது பெண்களுங்கூட வந்துபார்ப்பது வழக்கம். அந்த வழக்கத்தை யனுசரித்தே ஸீலியா, ராஸலின்டு இவ்விருவர்களும் அவ்விடம்வந்து சேர்ந்தார்கள். போர்க்களத்தில் வெகுதடவை அநேகவீரர்களைக்கொன்று வெற்றிபெற்ற ஒருகொழுத்தவீரன் இதற்குமுன் சண்டைசெய்யாத மிகவும் இளமைப்பருவத்திலுள்ள ஒரு வாலிபனெடு எதிர்க்க எத்தனித்து நிற்பதைக்கண்டு இவர்கள் நிலைகெட்டார்கள். இவர்கள் சொன்னால் ஒருக்கால் அந்தப் பேச்சை அவ்வாலிபன்காதில் ஏற்பானென்று நினைத்து பிரடெரிக் இவர்களைப்பார்த்து "என்பெண்மணிகளே நாங்கள் என்ன சொல்லியும் இந்த வாலிபன் பிடிவாதம்பண்ணுகிறான். இந்தப் பெயர்பெற்ற போர்வீரனுக்கு இவன் ஈடாவானு? நீங்கள் போய் மெதுவாய் இவனிடம்பேசி இவனைச் சண்டையிலிருந்து விலக்கிவிடுங்கள்" என்றுசொல்ல அவர்களும் அப்படியேசெய்ய அவனிடம் சென்றார்கள்.



ஸீலியா என்பவள் முதல்முதல் அந்த வாலிபனுடு பேச ஆரம்பித்தாள். ஆனால் இவள் வாக்கு அதிகப்பயிற்சியடைந்த வாக்கல்ல; ராஸலின்டோ நன்றாய்ப் பேசுவதில் அதிக சாமார்த்தியமுள்ளவள். அவள் இந்த வாலிபனிடஞ்சென்று சண்டையைவிட்டுவிடும்படி வெகுவாய்ப் பிரார்த்திக்க அவன் இவர்களைப்பார்த்து "நீங்கள் இவ்வளவு அன்புடன் கேட்டுக்கொள்ளும் பேச்சை நான் தட்டவேண்டியதாயிருக்கிறதே. அழகிலும் புத்தியிலும் சிறந்த சீமாட்டிகளுடைய உத்திரவுகளை நான் இதுவரையில் மீறினதில்லை. நீங்கள் அன்பாய்ச் சொல்லுகிற பேச்செல்லாம் எனக்கு ஆசீர்வாதமாய் நின்று என்னைக்காக்கவேண்டும். நான் தோல்வியடைந்தால் ஐயோ உங்கள் பேச்சைக்கேட்காமல் போனேனேயென்று துக்கப்படுகிறேன். ஒருக்கால் மாண்டுவிட்டால் நான் மனப்பூர்வமாய்ப் பிராணனை விடுகிறேன். எனக்கு இந்த உலகத்தில் சிநேகிதர்களேயில்லையாகையால் என்னைப்பற்றி யொருவரும் துக்கப்படமாட்டார்கள். நான் இந்த உலகத்தைவிட்டுப் போய்விட்டால் பூமியின்பாரமுங் கொஞ்சங் குறையும்" என்றான்.

இப்படிச்சொல்லி முடித்தவுடன் இவனுக்குமந்தப் போர்வீரனுக்குஞ் சண்டை ஆரம்பித்தது. ஸீலியா வென்பவள் இந்த வாலிபன்மேற் காயம்படக்கூடாதென்று மனதிற்குள் பிரார்த்தித்துக்கொண்டாள். ஆனால் இவனுக்காக முக்கியமாய் விசனப்பட்டவள் ராஸலின்டே. தனக்கு உலகத்தில் சிநேகிதர்கள் ஒருவருமில்லையென்றுந் தான்மாண்டுபோனல் ஒருவருந் துக்கப்படமாட்டார்களென்றும் பூமியின் பாரம் கொஞ்சங் குறையுமென்றுமிவன் சொன்னது ராஸலின்டு மனதை மிகவும் இளக்கித் தன்னைப்போல இவனும் ஒரு நாதனற்றவனென்று எண்ணச்செய்தது. அந்த நிமிஷம்முதல் ராஸலின்டு இந்த வாலிபனிடத்தில் பிரியம்வைத்துவிட்டாளென்று சொன்னாலுஞ் சொல்லலாம். இம்மாதிரி இரண்டு பெண்மணிகள் தன்னைப்பற்றித் துக்கப்படுவதைப் பார்த்த

யடைந்த வாலிபனுக்கு அதிக சக்தியும் பலமுண்டாய்விட்டது. தன் சக்தியைவிட அதிகமான காரியங்களைச் செய்து கடைசியாய்த் தப்போர்வீரனை வாலிபன் முறித்துவென்றுவிட்டான். போர்வீரன் கை கால் அசைக்கக்கூடச் சக்தியில்லாதவனாய்ச் சண்டையில் தோற்கடிக்கப்பட்டான். பிரெடரிக் அரசனும் வாலிபனைக்கண்டு சந்தோஷப்பட்டு அவனுடைய குலம் கோத்திரங்களை விசாரிக்கவே அவன் தனதுபேர் ஆர்லேண்டோ (Orlando) வென்றும் தான் சர்ரோலண்டு டி பாயிஸ் (Sir Rowland de Boys) என்னும் பிரபுவின் இளையகுமாரனென்றுஞ் சொன்னான்.

ஆர்லேண்டோவின் தகப்பனாகிய இந்தப் பிரபு கொஞ்ச நாளைக்குமுன்னால் இறந்துபோனான். தான் பிழைத்திருந்த காலமுழுதும் காட்டுக்கு ஓட்டிவிடப்பட்ட அரசனுடைய பிராணஸ்நேகிதனாயிருந்தான். சண்டையில் ஜெயித்தவன் காட்டில் வசித்துக்கொண்டிருக்கும் தனது தமையனுடைய முக்கிய ஸ்நேகிதனின் பிள்ளையென்று தெரியவந்தவுடன் இவ்வாலிபன்மேலிருந்த சந்தோஷமெல்லாம் பிரெடரிக்குத் துக்கமாய்மாறிவிட்டது. மனதிற்குள் என்னவருத்தமிருந்தபோதிலும் வெளியில் காட்டிக்கொள்ளாமலே அவன் சக்தியைக்கண்டு மெச்சி ஐயோ ஆர்லேண்டோ வேறொருவனுடைய மகனாயிருக்கக்கூடாதா என்றெண்ணிக்கொண்டு பிரெடரிக் வீடுபோய்ச்சேர்ந்தான்.

தன் தகப்பனாரின் பிராண ஸ்நேகிதனுடைய பிள்ளை ஆர்லேண்டோ என்னும் சங்கதி ராஸலிண்டிக்குத் தெரிந்ததும் அவள் ஆனந்தக்கண்ணீர்வடித்து ஸீலியா என்பவளைப் பார்த்து என் தகப்பனார் இவன் தகப்பனாரை மிகவும் நேசித்தாரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். நானும் இவனை ஏன் நேசிக்கக்கூடாதென்று சொல்லிமறுபடியும் ஆனந்தக் கண்ணீர்வடித்தாள்.



இவ்விருபெண்களும் அவன் கிட்டப்போய் பிரெடரிக் முகத்தைக்கடுக்குக்கொண்டு போனதற்காகத் துக்கப்படும் அந்த வாலிபனைப்பார்த்து தைரியம் சொன்னார்கள். ராஸலிண்டி என்பவள் தான் கழுத்தில் போட்டிருந்த ஓர் தங்கக் கொடியையெடுத்து ஆர்லேண்டோ கழுத்திற்போட்டு "ஐயா இதை என்னிமித்தம் போட்டுக்கொள்ளும். எனக்கு இருக்கும் சக்தி இப்பொழுது இவ்வளவுதான். எனக்குச்சரியான சக்தியிருக்கும் பக்ஷத்தில் இதற்கு மேலாகவே தங்களுக்குக் கொடுத்திருப்பேன்" என்றுசொல்லிப்போனாள். இப்பெண்கள் வீடுசேர்ந்தபிறகுகூட ராஸலிண்டி எப்பொழுதும் ஆர்லேண்டோவைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கக்கண்டு ஸீலியா என்பவள் தன்தமக்கை அவ்வாலிபனிடம் அன்புவைத்துவிட்டதாய்க்கண்டுகொண்டாள். உடனே அவள் நீ உன் தகப்பனார் அவன் தகப்பனாரிடம் பிரியமாயிருந்ததற்காக அவனிடம் அன்புவைத்தால் என் தகப்பனார் அவன் தகப்பனாரை வெறுத்ததற்காக நான் அவனை வெறுக்கலாமா. ஒருகாலும் வெறுக்கமாட்டேன் என்று சொன்னாள். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அவ்விடத்திற்கு பிரெடரிக் என்னும் பாவியுந்துசேர்ந்தான். தனது தமையனுடைய நற்குணங்களுக்காக அவனைச் சனங்கள் புகழ்ந்து அவர்பெண்ணாகிய ராஸலிண்டைக் குறித்துத் தயையாய்ப்பேசுவது இந்தப்பாவிகாதில் அநேகந்தடவைபட்டிருந்தது. இனி இவளை தமது அரண்மனையில் வைத்துக்கொள்ளக்கூடாதென்று அவன் நினைத்து உடனே அவளுந் தன்பெண்ணுமுட்கார்ந்திருக்குமிடம்வந்துசேர்ந்து "இனி நீ இங்கிருக்கக்கூடாது. உன் தகப்பனுக்குத் துணையாக அவர் போயிருக்கும் காடுபோய்ச்சேரப் புறப்படு" என்றான். இதைக்கேட்டு ஸீலியா கலங்கித் தன்தகப்பனார் காலில் விழுந்து "என் தந்தையே எனக்கு புத்தி தெரியாமலிருக்கும்பொழுது எனக்காக இவளை இங்குவைத்துக்கொண்ட தாங்கள் எனக்கு புத்திவந்தபிறகு இப்படி

இவளை என் காட்டுக்கு அனுப்பவேண்டும். நான் பிரியவளாயிருக்கும்பொழுது இவளுடைய உபயோகம் எனக்குத் தெரிந்திருக்கவேயொட்டாது. இப்பொழுது படிப்பு, விளையாட்டு, சாப்பாடு, தூக்கம் இவைகளில் எனக்குத் தோழியாயிருக்கும் என் ராசலின்டை நான் எப்படி விட்டுப்பிரிவேன்" என்று கண்ணுங் கண்ணீருமாய் நின்றாள். அவள் என்னசொல்லியும் அவள் தகப்பனார் அவளுக்கு இடங்கொடுக்கவேயில்லை. ராசலின்டு இருப்பதினால் தன் பெண்ணின் குணங்கள் கொஞ்சமேனும் பிரகாசிக்கமாட்டாதென்றும் அவள் காட்டுக்குப்போயே தீரவேண்டுமென்றுஞ் சொல்லிப்போனான்.

இப்படிப் பிரபுவின் போனதும் ஸீலியா கொஞ்சநேரம் யோசித்து தன் தகப்பனாரைவிட்டுத் தானுந் ராசலின்டு அழிகவென்று தோன்றவே அவளுடன் ஓடி ஆர்டன் காட்டில் அவள் தகப்பனார் எவர்க்குள் தானும் வசிக்க நிச்சயித்துவிட்டாள் அன்று இரவு ராசலின்டு அரண்மனையைவிட்டுப் போனவுடன் ஸீலியாவும் தன் தகப்பனுக்குத் தெரியாமல் ராசலின்டை பின்தொடர்ந்தாள்.

காட்டில் உயர்ந்த உடுப்புகளுடன் வழிநடப்பது பிசகென்று ஸீலியா நினைத்துத் தங்கள் உடுப்புகளைக் கழற்றி வைத்து ஏழைச்சனங்கள்போல உடுப்பு உடுக்கவேணுமென்று ராசலின்டுக்குச் சொன்னாள். அதற்கு அவள் அந்தக்காட்டிலும் நம்மிருவர்களில் ஒருவர் ஆண்வேஷம் போட்டுக்கொண்டுபோனால் அது நமக்கு மிகவும் நல்லதென்று சொன்னாள். உடனே இவ்விருவர்களுக்குள் ராசலின்டு உயரமானபடியால் தான் ஆண்வேஷம் போட்டுக்கொண்டு கானிமீட் (Ganymede) என்ற புருஷப்பெயரையுந் தரித்துக்கொண்டாள். ஸீலியா தானும் ஏழைப்பெண் உடுப்புடுத்திக்கொண்டு அலீனா (Alina) என்னும் பெயரை இட்டுக்கொண்டாள். இவ்விதமாய் உருமாறித் தங்கள் பணத்தையும் நகைகளையும் வழிச்செலவுக்காக எடுத்துக்கொண்



11619

டு இவர்கள் ஆர்டன் காட்டுக்குப்போகப் புறப்பட்டார்கள். இக்காடும் இவர்கள் நாட்டிலிருந்து வெகுதூரத்திலிருந்தது. ராசலின்டென்பவள் தான் கானிமீட் என்று பெயர்வைத்துக்கொண்டு அந்தப் புருஷப்பெயருக்குத் தகுந்த தைரியத்தையடைந்தாள். அவள் உண்மைத்தோழியாகிய ஸீலியாவும் அண்ணனென்று அவளைக்கூப்பிட்டுக்கொண்டு எத்தனைநாழிகை வழிநடந்த [illegible] சிரமமென்பதைக் கொஞ்சமேனும் உணரா [illegible] யன்பின் அலீனா என்று பொய்த்தங்கையாகச் சென்றாள்.

கடைசியாய் அநேகநாள் சென்றபிறகு இவர்கள் ஆர்டன் காட்டுக்குள் வந்துசேர்ந்தார்கள். அந்தக்காடு வெகுவிஸ்தாரமானதையால் அரசனைக் கண்டுபிடிக்க மிகவும் வருத்தமாயிருந்தது. ரஸ்தாவில் சத்திரம் சாலைகளிருந்ததுபோல் காட்டிலேயுமெப்படி இருக்கக்கூடும். அன்னம் ஆகாரமில்லாமலிரண்டொரு இவர்கள் அந்தக்காட்டில் அலைந்து திரியவே கானிமீட் என்னும் ராசலின்டுக்கு ஊக்கம்பொறுக்கக்கூடவில்லை. ஒருவேளை தன்தங்கையாகிய அலீனா என்பவளைப்பார்த்து "தங்காய் என்புருஷ உடுப்பைக்கழற்றிவைத்து நானும் ஒரு பெண்போல அழட்டுமா' என்று அயர்ப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுதே அந்தவழியாய் ஓர் இடையன் போகக்கண்டு அவனைநோக்கிக் கானிமீட் என்பவன் "ஐயா இந்தச்சின்னஞ்சிறு பெண்ணாகிய என் தங்கை பசியினால் பிராணன்போகக்கிடக்கிறாள். இவள்பிழைக்க ஒருகவளம் அன்னம் எங்கிருந்தாவது கொண்டுவந்து கொடுப்பீரானால் நான் உமக்குப் பணம் தருகிறேனென, அதற்கு அவன் ஐயா என் எஜமான் இப்பொழுது அதிக ஏழையாய்ப்போய்விட்டான். அவர் வீட்டை விற்கப்போகிறார்கள். அங்கு நீர் என்னுடன் கூட வந்தால் உமக்குவேண்டியதைச் சம்பாதித்துக்கொடுக்கிறேனென், அதற்குக் கானிமீட் ஒப்பித்தன் தங்கையை அழைத்துக்கொண்டு அவ்விடையன் பின்னேசென்றான். அங்கு கிடைத்ததைப்புசித்து அவ்விடையன் குடிசையையும் விலை

க்குவாய் இடைப்பையன், இடைப்பெண்போலத் தங்கள் வேஷத்தை நடக்கவேக்காமல் ராஸலிண்டு, ஸீலியா என்று இருவர்களும் அக்காட்டில் தங்கள் அரசன் இருக்கிற இடம் தெரி இதுவரையில் குடிசையிலேயே வசித்துவந்தார்கள்.

இவர்கள் இப்படிக்காட்டிக்கு வந்துவிட்டபிறகு ஆர்லெண்டோவினுடைய சமாசாரத்தைக் கவனிப்போம். ஆர்லெண்டோ என்பவன் ஸர் ரோலெண்டு டி போய்ஸ் என்பவனுடைய இளயமகனென்றுசொல்லி யிருக்கிறோம். இவனுக்கு ஆலிவர் (Oliver) என்றொரு தமையன் இருந்தான். தகப்பன் தான் இறந்துபோகும்போது ஆர்லெண்டோவை ஆலிவர் என்பவனிடம் ஒப்பிவித்து அவனதுபடிப்பு முதலியவைகளில் சாக்கிரதையாயிருக்க எச்சரித்திருந்தான். ஆனல் ஆலிவர் என்பவன் இந்தப் பெரியகுலத்தைக் கெடுக்கப்பிறந்த ஒரு கோடரி. ஆனதுபற்றி இறந்துபோகும்பொழுது தன் தகப்பனுர் சொல்லிப்போனவைகள் ஒன்றையுஞ்செய்யாமல் தனது தம்பிவிஷயத்தில் நிர்விசாரமாயிருந்துவிட்டான். ஆர்லெண்டோ உபாத்தியாயரில்லாமலே அநேக வித்தைகளைக்கற்றுக்கொண்டு மேன்மைபெறவே ஆலிவருக்கு இவனை ஒழித்துவிடவேண்டுமென்ற எண்ணமுண்டாகிவிட்டது. இதற்காகவே அநேகம்பேர்களைக்கொன்று பெயர்பெற்றுவந்த போர்வீரனுடு ஆர்லெண்டோ சண்டைசெய்ய ஆலிவர் ஏற்பாடு செய்திருந்தான். ஆனல் இவன் எண்ணின எண்ணத்திற்குவிரோதமாக ஆர்லெண்டோ போர்வீரனை வெல்லும்படி முடிந்தது. இந்தச் சந்தோஷசமாசாரம் இவன் வீடு வருமுன்னே ஆலிவருக்குத் தெரிந்துவிட்டது. இனி இவனைப்பூமியில் வைக்கக்கூடாது. இன்றிராத்திரியே இவன் அறையில் நெருப்புப்போட்டுக்கொளுத்தி இவனைக்கொல்ல வேண்டுமென்று வாய்விட்டுக்கொண்டான். அப்படி யிவன் சொன்னது ஆடம் (Adam) என்ற ஒரு வேலைக்காரன் காதில் விழுந்தது. அவன் ஆர்லெண்டோவுக்கு மிகவும் வேண்டியவன். தன் எஜமானன் வரவை எதிர்பார்த்திருந்து



அவனை வீடுவந்து சேர்ந்ததும் ஆடம் அவனைத் தனியாயழைத்துப்போய் அவன் காலில்விழுந்து " என் அருமை எஜமானனே, ரோலெண்டுவெம்சத்தை விளங்கவைக்கும் தேவரே நீர் ஏன் நற்குண நற்செய்கைகள் உள்ளவராயிருக்கிறீர். இவைகள் உமக்குமுன் இவ்விடம்வந்துவிட்டனவே, நீர் அந்தப்போர்வீரனைக்கொன்ற சங்கதி உம்முடைய தமையனுருக்குத்தெரிந்துவிட்டே அவர் உமக்குக்கிடைத்த பெயரைக்கண்டு பொறுமைகொண்டு உமது அறையில் தீப்போட்டு உம்மை எரித்துவிட நினைத்திருக்கிறார். ஆகையாலினி நாமிவ்விடமிருப்பதிற் பிரயோசனமில்லை. உமது கையிற் பணமில்லையென்பது எனக்குத்தெரியும். நானிவ்வளவுநாளாய் என் பிற்காலத்திற்காகச் சேர்த்துவைத்திருந்த 500 கிரௌன் * (Crown) களைக்கொண்டு நாம் கொஞ்சநாள் வழியிற் பிழைப்போம். நாமினி இங்கிருக்கக்கூடாதென்று சொல்லவே ஆர்லெண்டோ கிழவன் தன்மேல்வைத்த விசுவாசத்தைக்கண்டுகளித்து அப்பா நீ இந்தக்காலத்து மனுஷனல்ல குதுவாதில்லாதவன். நாமிருவரும் போவோம். உன் பணம் செலவழிந்துபோகுமுன்னமே நாம் பிழைக்கும்வழி எதாவதொன்று தேடிக்கொள்ளுகிறேன்" என்றுசொல்லி இருவரும் புறப்பட்டார்கள்.

போகும்வழி யின்னதென்றுதெரியாமல் ஆர்லெண்டோ ஆடமிவர்களிரண்டுபேரும் நடந்துகொண்டேபோய்க் கடைசியாய் ஆர்டன் என்னுங் காடுவந்துசேர்ந்தார்கள். அவ்விடத்தில் கானிமீட் அலீனு என்ற இருவர்களுஞ் சோற்றுக்காக எவ்வளவு வருத்தப்பட்டார்களோ அவ்வளவுவருத்த மிவர்களும் முதலிலப்படி நேரிட்டது. காட்டிற்குள் புகுந்து அநேக வீடுகள் தேடிப்பார்த்தும் மனுஷர்கள் குடியிருக்குமிடம் ஒன்றாவது யிவர்களுக்குத் தென்படவேயில்லை. கடைசியாய் ஆடம் பசியாற்களைத்து யினி என்னுல்

* இரண்டரை ரூபாய் விலையுள்ள ஓர் ஐரோப்பிய நாணயம்.

எதிர்த்தடிவைக்கமுடியாது. என்பிராணனும் இனிவெகுகாலம் நிலைநிற்காது. நீர் சுகமாய்ச் சிரஞ்சீவியாய் வாழ்ந்திரும்" என்றுசொல்லித் துவண்டுபோய் பூமியில் விழுந்தான். இப்படித் தன்னுடன் கூடவந்த தனது நம்பிக்கையுள்ள பழையவேலைக்காரன் பசியால்நொந்து பிராணனைவிடுவதைக்கண்டு கண்ணீர்வடித்து அவனைக்கையில் வாரியெடுத்துக்கொண்டு சிறுகன் கீழேயுதிர்ந்து மெத்தைபோலவிருந்தவாயிருக்கு மொருமரத்தின் நிழலில் அவனைப் படுக்கச்செய்து "அப்பா நீ விசனப்படாமலிங்குகொஞ்சநேரமிரு. ஈசுவரன் நம்மைக்காப்பாற்றுவார். நான் எங்கேயாவதுபோய் ஏதாவது கொண்டுவருகிறேனென்று சொல்லி அவ்விடம் விட்டுக்கிளம்பினான்.

ஆகாரம்பசித்த அவன் இங்குமங்குந்தேடிக்கொண்டு கடைசியாய் அரசனிருக்கும் காட்டிற்கே வந்துசேர்ந்தான். அப்பொழுதுதான் மரத்தின் நிழலாகிற அலமானகிரியின்கீழ் புல்மெத்தையாகிற சிங்காதனத்தின்மேல் அரசன் தன் சிநேகிதர்களுடன் உட்கார்ந்துகொண்டு காட்டிலகப்பட்ட கிழங்குகளில் கொஞ்சமெடுத்துப் புசித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது பசியால் கோபங்கொண்டு உருவின கத்தியும் கையுமாய் ஆர்லெண்டோ அங்குவந்து குதித்து "நில்லு, அந்த அன்னம் என்னுடையது. நீ தொட்டால் உன்னை வெட்டிவிடுவேனென்று கத்தியை யொருகையாலோங்கிக்கொண்டு மற்றொருகையால் சோற்றைக்கைப்பற்றினான். அரசனதைக்கண்டு திகைத்து உனது கஷ்டமிவ்வளவு துணியத்தையுண்டாக்கிற்று. அல்லது உன்மாதிரியே யிவ்வளவுதானுவென்றுகேட்க ஆர்லெண்டோ வெட்கி ஐயா என் பசியின்கொடுமை என்னை யிப்படிச்சொல்லச்செய்தது என்றான். உடனே அரசன் அவனைத் தன்னிடமுட்காரச்சொல்லித் தனக்குவேண்டியதைச் சாப்பிடச்சொல்ல



அம்மாதிரியானமரியாதைப்பேச்சுகளை ஆர்லெண்டோ கேட்டு அதிக வெட்கமடைந்து அரசன் காலில்விழுந்து "ஐயா, என்னை மன்னியுங்கள் இவ்விடத்திலிருப்பவர்களெல்லாரும் முரடர்களென்றெண்ணிக் கத்தியை யுருவிக்கொண்டுபாய்க் கேட்டேன்." நீங்கள் நல்ல காலத்தைக்கண்டிருப்பீர்களேயானால் சுகங்களைக்கண்டு சந்தோஷித்தும், துக்கங்களைக்கண்டு கண்ணீர்வடித்துமிருப்பீர்களேயானால் என் கஷ்டத்தைக்கண்டு மனமிரங்குங்கள், என்று கைகூப்பி நிற்க அதற்கு அரசன் "அப்பா இப்பொழுது நாங்கள் மிருகங்களோடு மிருகங்களாய் மரவுரியைக் கட்டிக்கொண்டு மரத்தின்கீழ் உட்கார்ந்திருந்தபோதிலும் நாங்கள் வீடுவாசல்களில் வசித்திருக்கிறோம். சுகந்துக்கம் எங்களுக்குத்தெரியும். பிறகு பேசிக்கொள்வோம். நீ கீழேயுட்கார்ந்து நாங்கள் கொடுக்கும் கொஞ்சத்தைச் சாப்பிடு" என்றான். அதற்கு ஆர்லெண்டோ என்வயிற்றுக்காக இவ்வளவுகஷ்டமில்லை. என்னுடன் கூட ஒரு கிழவன்வந்து பசியாற்களைத்து அடுத்தகாட்டில் விழுந்திருக்கிறான். அவன் பசிதீருகிறவரையில் நான் ஒரு கவளமுமுட்கொள்ளேன் எனவே அதற்கு அரசன் அப்படியானால் அவனைப்போய் நீ யழைத்துவா. நீ வந்துசேருகிறவரையில் நாங்கள் ஒரு பருக்கைகூடத்தொடுகிறதில்லையெனவே ஆர்லெண்டோ தன்வேலைக்காரனைத் தேடிக்கொண்டுபோய் அவனைக்கண்டு கையில் வாரியெடுத்து அரசனிடங்கொண்டுவந்துசேர்த்தான். அவன் புசித்து பசியைத்தீர்த்துக்கொண்டபிறகு மற்றவர்கள் சாப்பிட்டார்கள்.

ஆர்லெண்டோவும் சாப்பிட்டுமுடித்தவுடன் அவர்கள் யாரென்று அரசன் கேட்டுத்தனது அத்தியந்த சிநேகிதனுகிய ஸர்ரோலண்டு டிபாயிஸினுடைய மகனென்றும், வேலைக்காரனென்றுந் தெரியவரவே அவ்விருவர்களையும் மிகவும் ஆதரவுடன் தன்னிடம் வைத்து அரசன் காப்பாற்றிவந்தான்.

இப்படி ஆர்லெண்டோ ஆடம் சகிதம் அக்காவெந்து சேர்ந்தகாலம், காணிமீட் அலீனு என்றவர்களிடையன் குடிசையை வாங்கின காலத்திற்குச் சரியாயிருக்கலாம்.

ஒருநாள் காணிமீட் அலீனு இவ்விருவர்களும் காட்டில் உலாவிக்கொண்டிருக்கையில் அநேக மரப்பட்டைகளின் மேல் ராஸலிண்டு என்னும்பேர் வெட்டியிருப்பதையு மதின் கீழ் நாயகன் நாயகியைப்பார்த்து எழுதும் பாட்டுகள் எழுதியிருப்பதையுங்கண்டு திகைத்து மனுஷ்ய சஞ்சாரமில்லாத யிக்காட்டில் யாரிப்படி செய்திருக்கக்கூடுமென்று ஆலோசிக்கையிலேயே அங்கு ஆர்லெண்டோவருவதைக் கண்டார்கள்.

ஆர்லெண்டோவுக்குத் தான் பார்த்த காணிமீட் என்னு மிடைப்பையன் ராஸலிண்டு என்னும் ராசகுமாரத்தியாகத் தானிருக்கவேண்டுமென்று தோன்றவே யில்லை. தான் பார்த்தமனிதன் அழகாயிருக்கக்கண்டு அவனுடன் வேடிக்கையாய்ப்பேச ஆரம்பித்தான். பெண்ணாயிருந்து புருஷ வேடம் பூண்ட ராஸலிண்டும் சாதுரியமாயுஞ் சந்தோஷமாயும் பேச ஆரம்பித்து ஆர்லெண்டோவைப்பார்த்து யாரோ ஒருவன் பெண்மேலே விரகித்தவனிந்தக் காட்டிலிருக்கிறான் எங்கள் மரங்களின்மேலெல்லாம் ராஸலிண்டு என்றெழுதி அவைகளைப் பாழாக்குகிறான். அவனைமட்டும் நான் நேரே பார்ப்பேனேயானால் அவனுக்குத்தகுந்த புத்திசொல்வேன்" என்றான்.

உடனே ஆர்லெண்டோ காணிமீட் என்பவனிடமப்படி மரங்களின்மேல் எழுதுகிறவன் தான்தான் என அதற்கு இடைப்பையனும் நீ நமது குடிசைக்குவா அங்கு நான் ராஸலிண்டு மாதிரியாகப்பாவித்துக்கொண்டு உன்னை கேலிப்பது போலப் பேசுகிறேன், நீயுமென்னை அப்படியே நினைத்துப் பேசுவாயேயானால் நீ செய்யும் காரியத்தில் உனக்கே வெட்கம்வந்துவிடும் என்றான். ஆர்லெண்டோ யிப்படி யிடைப்



பையன் சொன்னதை நிசமாகவே யெண்ணி அன்றுமுதல் காணிமீட் அலீனு யிவ்விருவர்களும் வசித்த குடிசைக்குப் போய் வந்துகொண்டிருந்தான். ஒவ்வொரு தினமும் காணிமீடை தன் ராஸலிண்டாகப்பாவித்துச் சொல்லவேண்டிய வைகளை யெல்லாமவனிடஞ் சொல்லுவான். இப்படி யிவன் சொல்லுவதையெல்லா மிவனது நிஜமான அபிப்பிராயத்தைத் தெரிவித்தபடியால் காணிமீட் அலீனு என்னும் வேடம் பூண்ட ராஸலிண்டு மனதைக் களிக்கச்செய்தது. ஆகிலும் தனது தமக்கை ராஸலிண்டு தனக்கிஷ்டங்கொண்டாடமட்டுஞ் சந்தோஷப்படட்டுமென்று அலீனு வாயைத்திறவாமலிருந்துவிட்டாள். ஒருநாள் காணிமீட் என்பவன் தான் பூண்ட யிடைவேஷத்துடன் காட்டிலுலாவித்துக் கொண்டிருக்கையிலவ்விடம் அரசன் வருவதைக்கண்டான். அரசனவ்வாலிபனழகைக்கண்டு மகிழ்ந்து அவனண்டைவந்து நீ யாரப்பா, யார்பிள்ளை யென்றுவினவ அவனுமதற்கு நானுந்தங்களைப்போல பெரியவம்சத்திற் பிறந்தவன்தான் என்றான். இதைக்கண்டு யிவன் ராஜவம்சத்திற் பிறந்தவனென்றெண்ணமில்லாதபடியரசன் நகைத்துக்கொண்டுபோய்விட்டான். அப்பொழுது காணிமீட் தன் சுவரலாற்றைச் சொல்லாமலின்னுங் கொஞ்சநாள் மறைத்துவைப்போமென்றெண்ணிச் சும்மாயிருந்துவிட்டாள்.

ஒருநாள் ஆர்லெண்டோ என்பவன் காணிமீடைப் பார்க்கப்போய்க்கொண்டிருக்கையில் பூமியில் ஓர் மனிதன் படுத்துறங்குவதையு மவன் கழுத்திலொரு பச்சைப்பாம்பு சுற்றிக்கொண்டிருப்பதையுங் கண்டான். ஆர்வருவதைக் கண்டவுடன் பாம்பு சரசரவென்று ஓடிவிட்டது. உடனே கொஞ்சஞ் சமீபத்திற்சென்று பார்க்கும்பொழுது அங்கு பூனைபோல பதுங்கிக்கொண்டு தூங்குகிறவன் எப்பொழுது எழுந்திருக்கப்போகிறான் என்று எதிர்பார்த்ததாய் ஓர் பெண் சிங்கம் உட்கார்ந்திருக்கக்கண்டான். ஏனெனில் தூங்குகிற மனிதனை ஒருகாலும் சிங்கங்கள் தொல்லுகிறதே

வில்லை. உடனே தூங்குகிறவன் யார் என்று பார்க்கத் தன் தமையன் ஆலிவராயிருக்கக்கண்டு சிங்கத்திற்கு யிவனை யிரையாக்குவோமா என்று முதலில் யோசித்துப்பிறகு சகோதரவிசுவாசம் பொங்கிடவே கத்தியை உருவிச்சிங்கத்துடன் சண்டையிட்டு அதைக்கொன்றான். இப்படி நடந்த சண்டையில் ஆர்லெண்டோவைத் தனது நகங்களினால் சிங்கம் காயப்படுத்திவிட்டது. சிங்கத்துடனிவன் போரிட்ட சந்தடியில் ஆலிவர் எழுந்து தான் முதலில் அநேகவிதமாய்க்கெடுதி நினைத்துக் கொல்லமுயன்ற தன் தம்பியே தன்னைப்பெரிய ஆபத்திலிருந்து நீக்கினதைக்கண்டு வெட்கி கண்ணுங்கண்ணீருமாய் அவன் காலில்விழுந்து தான்செய்த குற்றங்களைப் பொறுக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆர்லெண்டோ மிகவும் நல்ல மனிதனானபடியால் உடனே சகித்தேனென்று சொல்லித்தன் தமையன் பாதங்களைத் தழுவினான். அந்த நிமிஷம்முதல் ஆலிவர் தன் தம்பியிடம் பரமவிசுவாசமுள்ளவனாயிருந்தான். இவன் தம்பியைக்கொல்ல உத்தேசித்துக் காட்டுக்குவந்தவன். தெய்வமிவ்விருவர்களையு மிப்படியாயொன்றாய்ச்சேர்த்துவைத்தது. ஆர்லெண்டோ கையிற் பட்டகாயம் பலமாயிருந்தபடியால் அன்றையதினம் கானிமிடைப் பார்க்கக்கூடாததாகச்செய்துவிட்டது. ஆகையால் அங்குப்போய்த் தான் வரக்கூடாத காரணத்தைச்சொல்லி வரும்படி தன்தமையனை யனுப்பினான். ஆலிவரும் அப்படியே யவ்விடஞ்சென்று அன்று ஆர்லெண்டோ தன்னைக்காப்பாற்றினதைப்பற்றி அவர்களிடம் சொல்லித்தன் தம்பி தனக்குச் செய்த உபகாரத்தைப்பற்றியும் முதலில்தானவனுக்குச் செய்துவந்த அபகாரங்களைப்பற்றியுஞ் சொல்லித்துக்கித்துப் பிறகு ஈசுவரன் தங்களைச் சேர்த்துவைத்ததற்காகக் களித்தான். இப்படி யிவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அலீனா என்பவள் ஆலிவர்மேல் மோகங்கொண்டுவிட்டாள். ஆர்லெண்டோ கையிற் காயம்பட்ட சங்கதியைக் கானிமீட் என்னும் ரோஸலிண்டு கேட்டவுடன் தான்போட்ட புருஷ



வேஷத்திற்குரிய தைரியத்தைக்காட்டிக்கொள்ளாமல் மூர்ச்சையாய் கீழே விழுந்தாள். உடனே எழுந்து ஆலிவரைப் பார்த்து உங்கள் தம்பியிடம் ரோஸலிண்டு எப்படி மூர்ச்சையாக விருப்பாளோ அப்படி நான் அபிநயித்தேனென்று சொல்லுங்களென்றாள். பிறகு கொஞ்சநாழிகை அலீனா விடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவள் நிசமாகவே தன்னைக்கண்டு மோகித்ததாக எண்ணித்திரும்பிவந்து தன் தம்பியைப்பார்த்து நடந்த சங்கதியையுஞ் சொன்னான்: அன்றியும் தம்பி உத்திரவு கொடுத்தால் அலீனாவைத் தான் கல்யாணம் பண்ணிக்கொண்டு அவள் குடிசையில் தன்தம்பிசகிதம் வாழ்ந்திருப்பேனென்றான். அதற்கு ஆர்லெண்டோ தன் தமயனைப்பார்த்து நீங்கள் அப்படியேசெய்யுங்களெனக்கு ஆக்ஷேபமில்லையென்றான். அவள் மட்டிற் சம்மதித்தால் நாளையதினமே கல்யாணத்தைமுடித்துவிடுவோம். சீக்கிரம்போய் அவள் அனுமதியைக்கேட்டு வாருங்கள் கல்யாணத்திற்கு அரசன் முதலியவர்களை நாம் வரவழைப்போம். அதோ அவள் தமையன் வருகிறான். இப்பொழுது நீங்கள் போனால் அவள் தனியாயிருப்பாள், அவள் அநுமதியை யறிந்து வரவேண்டுமென்றான். உடனே ஆலிவரும் அலீனாவிடஞ்சென்றான். கானிமீட் என்னும் ரோஸலிண்டு ஆர்லெண்டோவுக்கு என்னமோ ஏதோவென்று அறியும்பொருட்டுத்தன் தங்கைஅலீனாவைவிட்டுத்தனியேயிருந்து ஆர்லெண்டோவிருக்குமிடம் நாடிவந்தாள். இவ்விருவர்களுஞ் சந்தித்து ஒருவர் க்ஷேமத்தை யொருவர்விசாரித்துக் கொண்டவுடன் ஆலிவரலீனா யிவ்விருவர்களுக்குமுண்டான சிநேகத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது உன் தங்கைமட்டிற் சம்மதித்தால் நாளை அவ்விருவர்களுடைய கல்யாணத்தை நிறைவேற்றிவைப்பேன். ஆகா! இந்தச்சமயத்தில் ரோஸலிண்டுமட்டு மிருக்கும்பக்ஷத்தில் நானவளை எவ்வளவு சந்தோஷத்துடன் கல்யாணஞ்செய்துகொள்வேன்" என்றான்.

உடனே கானிமீட் என்பவன் ஆர்லெண்டோவைப்பார்த்து தான் தனது மாமாவிடத்தில் குன்யம் முதலான வித்தைகள் கற்றிருப்பதாகவும் மந்திரக்கோலைக்கொண்டு ராஸலின்டைத் தன்னிடமே மறுநாள்வரச்செய்யக்கூடுமென்றும் ஆர்லெண்டோமட்டிலவனிடத்தில பிரியமான அன்புவைத்திருக்கும்பக்ஷத்தில் அவளையுமவனிடத்தில் பிரியமான அன்புவைக்கச் செய்யக்கூடுமென்றுஞ் சொன்னான்.

ஆர்லெண்டோ இவைகளையெல்லாம் பாதிநம்பியும் பாதி நம்பாமலுங்கேட்டு நிச்சயமாய் நீ அப்படிச்செய்யக்கூடுமா என்றுகேட்கக் கானிமீட் நிச்சயமாய் நான் அப்படிச்செய்யக்கூடும். நீ நாளைப்போய் அரசன்முதலானவர்களைக் கல்யாணத்திற்கு அழைப்பாயென்றுசொல்லி அரசனிடஞ்சென்று அவனையுமவன் சிநேகிதர்களையுமழைத்தார்கள். அவர்களும் வருவதாக ஒப்புக்கொண்டார்கள்.

மறுநாள் பொழுதுவிடிந்தது. இரண்டு கல்யாணங்களையும் நிறைவேற்ற அவ்விடமிருந்த சனங்களெல்லாங் கூடினார்கள். ஆயினும் கல்யாணப்பெண் ஒருவள்தானிருந்தபடியால் மற்றொரு பெண்ணை கானிமீட் கொண்டுவந்து சேர்ப்பானோ சேர்க்கமாட்டானோவென்று நம்பிக்கையற்றவர்களாயிருந்தார்கள். அப்பொழுது அந்த இடைப்பையன் அரசனைப்பார்த்து நான் தங்கள் பெண்ணைக்கொண்டுவந்து சேர்த்தால் அவளை ஆர்லெண்டோ கல்யாணஞ்செய்துகொள்ள நீர் சம்மதிப்பீராவென்று கேட்க அதற்கு அரசன் ஆக்ஷேபமில்லை அகத்தியம் சம்மதிப்பேன். அவளுக்குச் சீதனமாகக்கொடுக்க எனக்கு நாடொன்றுமில்லையேயென்று துக்கப்படுகிறேன் என்றான். பிறகு கானிமீட் ஆர்லெண்டோவைப்பார்த்து உமக்குஞ் சம்மதந்தானோவென்றுகேட்க அதற்கு அவனும் எனக்கென்ன ஆக்ஷேபம். ஒருக்கால் எனக்கு ராச்சியமில்லையென்று அவள் சம்மதிக்காமலிருந்தால் என்னமோவென்றான்.



உடனே கானிமீட் அலீனாவென்ற இவ்விருவர்களுந் தங்கள் குடிசைக்குச் சென்றார்கள். அவ்விடம் கானிமீட் என்பவன் தான் போட்டிருந்த இடைப்பையன் உடுப்பைக்கழற்றி ராஸலின்டு உடையைத்தரித்து குன்யத்தின் சகாயமின்றி பெண்ணாக மாறிவிட்டான். அலீனாவும் தன்னிடைப்பெண் உடையையகற்றி ராசகுமாரத்தி உடுப்பைத்தரித்து ஸீலியா சீமாட்டியாக மாறிவிட்டாள். இப்படி யிவர்கள் போயிருக்கையில் ஆர்லெண்டோவைப்பார்த்து அரசன் கானிமீட் என் பெண்ஜாடையாயிருக்கிறானென்றான். ஆர்லெண்டோ தானும் வெகுநாளாயப்படியே சந்தேகித்திருந்ததாகச் சொன்னான். இப்படி யிவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே ராஸலின்டும் ஸீலியாவும் தங்கள் நிஜவுடையுடன் அங்குவந்து தோன்றினார்கள். குன்யம் முதலிய பொய்ப்பேச்சுகள் பேசாமல் ராஸலின்டு தன் தகப்பனார் திருவடிகளை வணங்கினாள். இதுவரையிலும் தான் காட்டிற்குவந்தகாரணம் இன்னதென்றும் தானிடைப்பையன் வேஷம்பூண்டகாரணம் இன்னதென்றும் தன் தகப்பனாரிடம்படிப்படியாய்ச்சொல்லி ஆர்லெண்டோவைத் தனக்குக் கல்யாணஞ்செய்து கொடுக்கப்பிரார்த்தித்தாள்.

இவைகளையெல்லாங்கேட்ட அரசனுக்குண்டான ஆனந்தத்திற்களவுண்டோ. அந்த க்ஷணமே தனது பெண்ணை ஆர்லெண்டோவுக்கும் ஸீலியாவை ஆலிவருக்குங் கல்யாணஞ்செய்துகொடுத்தார். இவ்விரண்டுகல்யாணங்களுக்கும் இடந்தக்கதாயில்லாமல் காடாயிருந்தபோதிலும் கல்யாண பெண்பிள்ளைகளுக்கும் விருந்தாளிகளுக்குமுண்டான ஆனந்தத்திற்கு ஒப்பான ஆனந்தமிந்த உலகத்திலிருக்கமாட்டாது. இவர்களெல்லாருஞ் சந்தோஷமாயுட்கார்ந்துகொண்டு மரத்தின் நிழலடியில் புற்களின்மேல் இலையைப்பரப்பிக்கொண்டு காட்டிற்கிடைத்த கந்தமூலங்களைப்புசித்துக்கொண்டிருக்கையிலொரு தூதனவ்விடம்போய்வந்து அவர்கள் சந்தோஷத்தைப் பன்மடங்காக்க தெய்வம்போல அரசனுக்குத்தன் நாடுகிடைத்ததாகச் சந்தோஷசமாசாரஞ் சொன்னான்.

இவ்வரசன் தம்பியாகிய பிரடெரிக் என்னுங்கொடுங்கோல் மன்னன் தன் மகள் ஸீலியா கூடக்காட்டிற்கு அரசனை நாடு கடத்திவிட்டதைக் கண்டு கோபங்கொண்டு தன் தமையன் கூட்டத்தோடு காட்டில் வசித்துக்கொண்டிருக்க எனக்கண்டு அவனை நாடி அங்குப்போக பொறுக்காதவனும் அவனைப் பிடித்து அவன் சிநேகிதர்களுடன் தண்டிக்க வித்தப்பாலி தன் மகளுடன் ஆர்டன் காட்டைநோக்கிப் புறப்பட்டான். நடுக்காட்டில் ஒரு சன்னியாசியைக் கண்டு அவருடன் வெகுநாழிகை பேசி யெதார்த்த உபதேசம்பெறவே தான் கொண்ட கருத்து கெட்ட கருத்தென்றும் - தான் கொடும்பாவியென்றும் அவனுக்குத் தோன்றிவிட்டது. உடனே தனக்குப்பாக்கியிருந்த வாழ்நாட்களை நல்வழியாய்க் கழிக்க பிரடெரிக் என்பவன் ஒரு சன்னியாசியைப்போல் தெய்வத்தை ஆராதிப்பதில் தன் முழுக்கருத்தையும் வைத்துவிட்டான். இப்படித் தான் சன்னியாசியாய்ப் போனதுந் தான் அக்கிரமமாய்ப் பிடுங்கிக்கொண்ட நாட்டைத் தன் சிநேகிதர்களுடன் காட்டிலிருக்கும் தன் தமையனுக்குத் தூதனுப்பினான்.

இந்த சந்தோஷ சமாசாரம் பொழுதவர்களுக்குண்டாயிருந்த ஆனந்தத்தைப் பெருக்கிற்று. இதைக்கேட்டவுடன் ஸீலியா தன் தங்கை ராஜ்யத்தை தன் தகப்பனுக்குப் பிற்காலம் அவளுக்குக் கிடைத்ததாகச் சந்தோஷப்பட்டாள். தன் தகப்பனுக்குப்பின் தனக்கு வரவில்லையேயென்றும் துக்கமிவளுக்குக் கொஞ்சமேனுமில்லை. ஏனெனில் இவ்விருவர்களுக்குமிருந்த சிநேகம் பொறாமை பாவுவதற்கு இடமில்லாததாயிருந்தது.

அரசன் தன் பெண்கள் தனக்குக்கஷ்டகாலத்திலுண்டாயிருந்த சிநேகிதர்கள் யாவருடனும் தன் நாட்டுக்குச்சேர்ந்தவர்க்கு தன்னுடனிருந்தவர்களுக்கெல்லாம் தக்கபடி மரியாதைசெய்தான்.

---

# ENGLISH WORKS

BY

PANDIT NATESA SASTRI, M. F. L. S.

| | RS. | A. | P. |
|---|---|---|---|
| [Fol]klore in South India, Part I ... | 1 | 0 | 0 |
| *Postage* ... ... ... | 0 | 1 | 0 |
| [Fol]klore in South India, Part II... | 0 | 8 | 0 |
| *Postage* ... ... ... | 0 | 1 | 0 |
| [Th]e Dravidian Nights Entertainments. | 1 | 0 | 0 |
| *Postage* ... ... ... | 0 | 2 | 0 |
| [To]pographical Notes on Kanchi... | 0 | 8 | 0 |
| *Postage* ... ... ... | 0 | 1 | 0 |

([Pa]rt III. Folklore in the South India in the Press.)

[MA]DRAS:—The Secretary, M. S. B. & V. L. *Society, Old College, Nungambakam.*

BOMBAY:—The Secretary, Education Society's Press, *Byculla.*

LONDON:—Messrs. Trübner & Co., *Ludgate Hill.*

[illegible]

பண்டித நடேச சாஸ்திரியாருடைய

# தமிழ்ப்புத்தகங்கள்.

| | அ |
|---|---|
| [illegible] ... ... | 2 |
| முத்திராராக்ஷஸம் ... ... | 2 |
| வேணீசம்ஹாரம் ... ... | 2 |
| [illegible] ... ... | 2 |
| (AS YOU LIKE IT.) | |
| ரஸலிண்டு சரித்திரம் ... ... | 1 |
| ஒவ்வொரு புத்தகத்திற்கும் தபாற்கூலி ... | 0 |
| திராவிட பூர்வகாலக்கதை ... ... | 10 |
| தபாற்கூலி ... ... | 1 |
| திராவிட மத்தியகாலக்கதை ... ... | 10 |
| தபாற்கூலி ... ... | 1 |

☞ இப்புத்தகங்கள் வேண்டுமெனில் சென்னபட்டணம் பழயகாலேஜு புத்தகசங்கத்தார் ஆபீ[illegible] [illegible] பெற்றுக்கொள்ளலாம்.

☞ *Apply to*

THE SECRETARY,

M. S. B. & V. L. SOCIETY,

*Old College, Nungambakam,*

MADRAS.

2166